**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

# காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2017

## (எண் 20/2017)

**( 2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு )**

# THE FOOTWEAR DESIGN AND DEVELOPMENT INSTITUTE ACT, 2017

## (No. 20 of 2017)

**(As on 31st October, 2023)**


தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

## காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2017

(எண் 20/2017)

## THE FOOTWEAR DESIGN AND DEVELOPMENT INSTITUTE ACT, 2017

**(No. 20 of 2017)**

# PREFACE

This edition of the Footwear Design and Development Institute Act, 2017 (No 20 of 2017) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 12th May, 2023 on Pages from 115 to 158.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
12th May, 2023. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2017 (எண் 20/2017) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, மே 12 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 115 முதல் 158 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
21, மே 2023. இந்திய அரசு செயலாளர்.

# THE FOOTWEAR DESIGN AND DEVELOPMENT INSTITUTE ACT, 2017

**(No. 20/2017)**

## CONTENTS

**Sections** **Pages**

### CHAPTER I

### PRELIMINARY


| Sections | | Pages |
|---|---|---|
| 1. | Short title and commencement. | 1 |
| 2. | Declaration of Footwear Design and Development Institute as an institution of national importance | 1 |
| 3. | Definitions. | 2 |


### CHAPTER II

### THE INSTITUTE


| | | |
|---|---|---|
| 4. | Establishment of Institute. | 4 |
| 5. | Vesting of properties. | 6 |
| 6. | Effect of incorporation of Institute. | 6 |
| 7. | Functions of Institute. | 7 |
| 8. | Power of Governing Council. | 9 |
| 9. | Institute be open to all races, creeds and classes. | 11 |
| 10. | Teaching at Institute. | 12 |
| 11. | Visitor. | 12 |
| 12. | Authorities of Institute. | 12 |
| 13. | The Senate. | 12 |

# காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2017

(எண் 20/2017)

## பொருளடக்கம்

பிரிவுகள் பக்கங்கள்

### அத்தியாயம் I

### முன்னுரை


1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம். 1

2. காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தை ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக விளம்புதல். 1

3. பொருள் வரையறைகள். 2


### அத்தியாயம் II

### நிறுவனம்


4. நிறுவனத்தை நிறுவுதல் 4

5. சொத்துக்கள் உற்றமைதல். 6

6. நிறுவனத்தைக் கூட்டுருமமாகப் பதிவு செய்வதன் விளைபயன். 6

7. நிறுவனத்தின் செயற்பணிகள். 7

8. ஆட்சி மன்றத்தின் அதிகாரங்கள். 9

9. நிறுவனமானது, அனைத்து இனங்களுக்கும், சமயக் கோட்பாடுகளுக்கும் வகுப்புகளுக்கும் பொதுவானதாகும். 11

10. நிறுவனத்தில் கல்வி கற்பித்தல். 12

11. மேற்பார்வையீட்டாளர். 12

12. நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள். 12

13. ஆட்சிக்குழு. 12

14. Functions of Senate. 13

15. Functions, powers and duties of Chairperson. 14

16. Managing Director. 14

17. Secretary. 15

18. Executive Director. 15

19. Power and duties of other authorities and officers. 16

20. Grants by Central Government. 16

21. Funds of Institute. 16

22. Setting up of endowment fund. 17

23. Accounts and audit. 17

24. Pension and provident fund. 18

25. Appointment. 18

26. Statutes. 19

27. Statutes how made. 20

28. Ordinances. 21

29. Ordinance how made. 22

30. Tribunal of Arbitration. 23

**CHAPTER III**

**MISCELLANEOUS**

31. Act and proceedings not to be invalidated by vacancies. 23

32. Sponsored schemes. 24

14. ஆட்சிக்குழுவின் செயற்பணிகள். 13

15. தலைமையருக்குள்ள செயற்பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகள். 14

16 மேலாண்மை இயக்குநர். 14

17. செயலாளர். 15

18. நிருவாக இயக்குநர். 15

19. பிற அதிகாரஅமைப்புகளுக்கும் அலுவலர்களுக்குமான அதிகாரமும் கடமைகளும். 16

20. மைய அரசால் வழங்கப்படும் மானியங்கள். 16

21. நிறுவனத்தின் நிதியங்கள். 16

22. நிலைக்கட்டளை நிதியத்தை ஏற்படுத்துதல். 17

23. கணக்குகளும் தணிக்கையும். 17

24. ஓய்வூதியம் மற்றும் வருங்கால வைப்பு நிதியம். 18

25. அமர்த்தம். 18

26. நிலையமைவிதிகள். 19

27. நிலையமைவிதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன. 20

28. நெறியமைவிதிகள். 21

29. நெறியமைவிதி எவ்வாறு செய்யப்படுகிறது. 22

30. பொதுவர் தீர்ப்புமுறைத் தீர்ப்பாயம். 23

## அத்தியாயம் III

## பல்வகை

31. காலியிடங்கள் இருப்பதனால் செயல்களும் நடவடிக்கைகளும் செல்லுந்தன்மையற்றவையாக ஆக்கப்படுதல் ஆகாது. 23

32. ஊக்க ஆதரவுச் செயல்முறைத் திட்டங்கள். 24

| | | |
|---|---|---|
| 33. | Power of Institute to grant degree, etc. | 24 |
| 34. | Institute to be public authority under the Right to Information Act, 2005. | 25 |
| 35. | Power of Central Government to make rules. | 25 |
| 36. | Returns and information to be provided to Central Government. | 26 |
| 37. | Transitional provisions. | 26 |
| 38. | Statute and Ordinance to be published in the Official Gazette and to be laid before Parliament. | 27 |
| 39. | Power to remove difficulties. | 28 |

**SCHEDULE**

33. பட்டங்கள் முதலியவற்றை அளிப்பதற்கு நிறுவனத்திற்கான அதிகாரம். 24

34. நிறுவனம் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் கீழ் பொது அதிகார அமைப்பாக இருத்தல். 25

35. விதிகள் செய்வதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம். 25

36. மைய அரசுக்கு வழங்கப்படவேண்டிய விவரஅறிக்கைகளும் தகவல்களும். 26

37. மாறும் இடைக்காலத்திற்கான வகையங்கள். 26

38. நிலையமைவிதிகளும் நெறியமைவிதிகளும் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல் மற்றும் நாடாளுமன்றத்தின் முன்வைக்கப்படுதல். 27

39. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். 28

**இணைப்புப்பட்டியல்**

# THE FOOTWEAR DESIGN AND DEVELOPMENT INSTITUTE ACT, 2017

## No. 20 of 2017

[4th August, 2017.]

An Act to establish and declare the Footwear Design and Development Institute as an institution of national importance for the promotion and development of quality and excellence in education, research and training in all disciplines relating to footwear and leather products design and development and for matters connected therewith or incidental thereto.

BE it enacted by Parliament in the Sixty-eighth Year of the Republic of India as follows:—

## CHAPTER I

## PRELIMINARY

Short title and commencement.

1. (1) This Act may be called the Footwear Design and Development Institute Act, 2017.

(*2*) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint; and different dates may be appointed for different provisions of this Act and any reference to the commencement in any such provision of this Act shall be construed as a reference to the commencement of that provision.

Declaration of Footwear Design and Development Institute as on institution of national importance.

2. Whereas the objects of the institution known as the Footwear Design and Development Institute, are such as to make it the institution of national importance, it is hereby declared that the Footwear Design and Development Institute is an institution of national importance.

---

1. 16th October 2017, *vide* notification No. S.O. 3248 (E), dated 5th October, 2017, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).

# காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2017

## (எண் 20/2017)

[2017, ஆகஸ்ட் 4]

காலணி மற்றும் தோல் ஆகுபொருள்கள் வடிவமைப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான அனைத்துப் பயிலாறுகளிலும் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றில் தரத்தையும் உயர்திறத்தையும் உயர்த்தி மேம்படுத்துவதற்காகக் காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஒன்றை நிறுவி அதனை ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமென விளம்புவதற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்காகவுமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

### அத்தியாயம் I

### முன்னுரை

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2017 என்று வழங்கப்பெறும்.

(2) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் அத்தகைய தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களுக்காக வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம்; மற்றும் இந்தச் சட்டத்தின் அத்தகைய வகையம் எதிலும் தொடக்கநிலைக்கான சுட்டுகை எதுவும் அந்த வகையத்தின் தொடக்கநிலைக்கான ஒரு சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தை ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக விளம்புதல்.

2. காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் என அறியப்படும் நிறுவனத்தின் நோக்கங்கள், அதனைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக ஆக்குவதாக இருப்பதால், காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் ஆகும் என்று ஈங்கிதனால் விளம்பப்படுகிறது.

---

1. 2017, அக்டோபர் 16, 2017, அக்டோபர் 5 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண். எஸ். ஓ. 3248 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

Definitions.

3. In this Act, unless the context otherwise requires,—

(*a*) "Chairperson" means the Chairperson of the Institute nominated under clause (*a*) of sub-section (*3*) of section 4;

(*b*) "design" means a rational, logical and sequential innovation process for the purposes of transferring culture to viable products and services in footwear and leather products, including fashion and retail thereof and for providing a competitive edge to products and services;

(*c*) "development" means the systematic use of scientific and technical knowledge to meet specific objective or requirements and includes an extension of the theoretical or practical aspects of concepts, design, discovery and invention including business thereof;

(*d*) "Executive Director" means the Executive Director of the Institute campus appointed under section 18;

(*e*) "Fund" means the Fund of the institute to be maintained under section 21;

(*f*) "Governing Council" means the Governing Council of the Institute constituted under sub-section (*3*) of section 4;

(*g*) "Institute" means the Footwear Design and Development Institute established under sub-section (*1*) of section 4;

பொருள் வரையறைகள்.

3. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(அ) "தலைமையர் " என்பது, 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்(அ) கூறின்படி நியமிக்கப்பெற்ற நிறுவனத் தலைமையர் என்று பொருள்படும்;

(ஆ) "வடிவமைப்பு" என்பது, புதுப்பாணி மற்றும் அதன் விற்பனை, உற்பத்திப் பொருள்களுக்கும் பணிகளுக்கும் போட்டிக்களத்தில் விஞ்சி நிற்கும் தன்மையை வழங்குதல் உள்ளடங்கலான காலணி மற்றும் தோல் ஆகுபொருள்களில் பண்பாட்டின் பதிவுகளை வாழும் நிலைபெற்ற ஆகுபொருள்களாகவும் பணிகளாகவும் மாற்றும் நோக்கத்திற்காக அறிவுக்குப் பொருத்தமான, காரணகாரியம் தொடர்புடைய மற்றும் தொடர் விளைவுடனான புதுப்புனைவு செயல்முறை என்று பொருள்படும்;

(இ) "மேம்பாடு" என்பது, குறிப்பிட்ட குறியிலக்கை அல்லது தேவைகளை அடையும் பொருட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவினை முறைப்படி பயன்படுத்துதல் என்று பொருள்படும்; மற்றும் அடிப்படைக் கோட்பாடுகள், வடிவமைப்பு, கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கப்புனைவு ஆகியவற்றின் தொழில் உள்ளடங்கலானவற்றின் கருத்தியலான அல்லது நடைமுறைசார்ந்த பண்புகளை விரிவாக்கம் செய்தலை உள்ளடக்கும்;

(ஈ) "செயல்முறை இயக்குநர்" என்பது, 18 ஆம் பிரிவின்படி அமர்த்தப்பெற்ற நிறுவனத்தின் வளாகச் செயல்முறை இயக்குநர் என்று பொருள்படும்;

(உ) "நிதியம்" என்பது, 21 ஆம் பிரிவின்படி பேணிவரப்படவேண்டிய நிறுவனத்தின் நிதியம் என்று பொருள்படும்;

(ஊ) "ஆட்சி மன்றம்" என்பது, 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி அமைக்கப்பட்ட நிறுவனத்தின் ஆட்சி மன்றம் என்று பொருள்படும்;

(எ) "நிறுவனம்" என்பது, 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி நிறுவப்பட்ட காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் என்று பொருள்படும்;

(h) "Institute campus" means an Institute campus specified in the Schedule;

(*i*) "leather products" includes a product made of leather or any other material or combination thereof;

(*j*) "Managing Director" means the Managing Director of the Institute appointed under section 16;

(k) "Member" means a Member of the Governing Council and includes the Chairperson;

(l) "notification" means a notification published in the Official Gazette;

(*m*) "prescribed" means prescribed by rules made under this Act

(n) "Schedule" means the Schedule appended to this Act;

(*o*) "Secretary" means the Secretary of the Institute appointed under section 17;

(p) "Senate" means the Senate of the Institute referred to in section 13;

(*q*) "Society" means the Footwear Design and Development Institute registered under the Societies Registration Act, 1860 (21 of 1860);

(*r*) "Statutes" and "Ordinances" mean respectively the Statutes and the Ordinances of the Institute made under this Act.

(ஏ) "நிறுவன வளாகம்" என்பது, இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு நிறுவன வளாகம் என்று பொருள்படும்;

(ஐ) "தோல் ஆகுபொருள்கள்" என்பது, தோலினாலோ அல்லது பிற பொருள் எதனாலுமோ அல்லது அவற்றின் சேர்க்கையாகவோ ஆக்கப்படும் ஒரு ஆகுபொருளை உள்ளடக்கும்;

(ஒ) "மேலாண்மை இயக்குநர்" என்பது, 16 ஆம் பிரிவின்படி அமர்த்தப்பெற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் என்று பொருள்படும்;

(ஓ) "உறுப்பினர்" என்பது, ஆட்சிமன்றத்தின் ஓர் உறுப்பினர் என்று பொருள்படும்; மற்றும் தலைமையரை உள்ளடக்கும்;

(ஔ) "அறிவிக்கை" என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்;

(க) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ங) "இணைப்புப்பட்டியல்" என்பது, இந்தச் சட்டத்திற்குப் பின்னிணைப்பாகவுள்ள இணைப்புப்பட்டியல் என்று பொருள்படும்;

(ச) "செயலாளர்" என்பது, 17 ஆம் பிரிவின்படி அமர்த்தப்பெற்ற நிறுவனத்தின் செயலாளர் என்று பொருள்படும்;

(ஞ) "ஆட்சிக்குழு" என்பது, 13 ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள நிறுவனத்தின் ஆட்சிக்குழு என்று பொருள்படும்;

(ட) "சங்கம்" என்பது சங்கங்கள் பதிவுச் சட்டம், 21/1860. 1860 இன்படி பதிவுசெய்யப்பெற்ற காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் என்று பொருள்படும்;

(ண) "நிலையமைவிதிகள்" மற்றும் "நெறியமை விதிகள்" என்பன, முறையே, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட நிறுவனத்தின் நிலையமைவிதிகள் மற்றும் நெறியமைவிதிகள் என்று பொருள்படும்.

## CHAPTER II

## THE INSTITUTE

Establishment of Institute.

4. (1) On and from the date of commencement of this Act, the Footwear Design and Development Institute shall be established as a body corporate by the name aforesaid.

(2) The Institute shall have perpetual succession and a common seal with power, subject to the provisions of this Act, to acquire, hold and dispose of property and to contract, and shall, by that name, sue or be sued.

(3) The Institute shall consist of a Governing Council having the following Members, namely:—

(a) a Chairperson, who shall be an eminent academician, scientist, or industrialist from leather sector, to be nominated by the Central Government;

(*b*) the Managing Director, *ex officio*;

(*c*) the Joint Secretary in the Ministry or Department in the Government of India dealing with Footwear Design and Development Institute, *ex officio*;

(*d*) the Joint Secretary in the Ministry or Department in the Government of India dealing with the leather, retail or fashion sector, *ex officio*;

(*e*) the Director Finance of the Ministry or the Department in the Government of India dealing with Footwear Design and Development Institute, *ex officio*;

(*f*) a representative of Ministry or Department in the Government of India dealing with skill development and entrepreneurship, *ex officio*;

## அத்தியாயம் II

## நிறுவனம்

4. (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும், காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், மேலேகண்ட பெயரால் ஒரு கூட்டுருமக் குழுமமாக நிறுவப்படுதல் வேண்டும். நிறுவனத்தை நிறுவுதல்.

(2) நிறுவனமானது, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, சொத்து ஈட்டுவதற்கும், வைத்துவருவதற்கும் அயலடைவு செய்வதற்கும் மற்றும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்குமான அதிகாரத்துடன், தொடர்ந்த நிலைப்பாடும் தனியுறு இலச்சினையொன்றும் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும் அந்தப் பெயரால் வழக்கிடுதலும் வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) நிறுவனமானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சி மன்றம் ஒன்றைக் கொண்டிருக்கும், அவர்களாவர்:–

(அ) மைய அரசால் நியமிக்கப் பெறவேண்டிய, தோல் துறைக்களத்திலிருந்து ஒரு சிறப்புநிலை கல்வியாளராகவோ, அறிவியல் அறிஞராகவோ அல்லது தொழிலதிபராகவோ இருக்கின்றவரான, ஒரு தலைமையர்;

(ஆ) மேலாண்மை இயக்குநர் பதவி வழி.

(இ) காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தைக் கையாளும் இந்திய அரசு அமைச்சகத்தின் அல்லது துறையின் இணைச் செயலாளர், பதவி வழி;

(ஈ) தோல், விற்பனை அல்லது புதுப்பாணித் துறையைக் கையாளும் இந்திய அரசு அமைச்சகத்தின் அல்லது நிதி துறையின் இணைச் செயலாளர், பதவி வழி;

(உ) காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தைக் கையாளும் இந்திய அரசு அமைச்சகத்தின் அல்லது துறையின் இயக்குநர், பதவி வழி;

(ஊ) தனித்திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவியலைக் கையாளும் இந்திய அரசு அமைச்சகத்தின் அல்லது நீதித்துறையின் சார்பாற்றுநர் ஒருவர், பதவி வழி

(*g*) four professionals or industrialists to represent theCouncil for Leather Exports, the Indian Leather Garments Association, the Indian Footwear Components Manufacturers Association, and the Confederation of Indian Industry National Committee on Leather, Footwear and Leather Products, to be nominated by the Central Government; and

(h) one person each from the National Institute of Fashion Technology, National Institute of Design, the Central Leather Research Institute, the Indian Institute of Technology and the Indian Institute of Management, to be nominated by the Central Government.

(4) The term of office of the Chairperson and other Members, other than *ex officio* Members thereof, shall be three years and they shall be entitled for such allowances as may be determined by the Central Government.

(5) The term of office of the Members nominated to fill a casual vacancy shall continue for the remainder of the term of the Member in whose place he has been nominated.

(6) The Governing Council shall meet at least two times in a year at such place and time and observe such rules of procedure in regard to the transaction of business at its meetings as may be determined by the Governing Council.

(7) Save as otherwise provided in this section, the term of office of an ex officio member shall continue as long as he holds the office by virtue of which he is a member.

(எ) மைய அரசால் நியமிக்கப் பெறவேண்டிய, தோல் ஏற்றுமதிகளுக்கான மன்றம், இந்தியத் தோல் உடைவகைகள் கழகம், இந்தியக் காலணி ஆக்கக்கூறுகள் உற்பத்தியாளர்கள் கழகம் மற்றும் தோல், காலணி மற்றும் தோல் ஆகுபொருள்களுக்கான இந்திய விசைத்தொழில் தேசியக் குழுவின் கூட்டமைப்பு ஆகியவற்றைச் சார்பாற்றம் செய்வதற்கு நான்கு விழைதொழிலர்கள் அல்லது தொழிலதிபர்கள்; மற்றும்

(ஏ) மைய அரசால் நியமிக்கப்பெற வேண்டிய, தேசிய புதுப்பாணி தொழில்நுட்ப நிறுவனம், தேசிய வடிவமைப்பு நிறுவனம், மையத் தோல் ஆராய்ச்சி நிறுவனம், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இந்திய மேலாண்மை நிறுவனம் ஆகிய ஒவ்வொன்றிலிருந்தும் ஒருவர்.

(4) தலைமையர் மற்றும் அதன் பதவிவழி உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டாக இருத்தல் வேண்டும்; மற்றும் அவர்கள், மைய அரசால் தீர்மானிக்கப்படலாகும் அத்தகைய படித்தொகைகளுக்கு உரிமையுடையோர் ஆவர்.

(5) இடையெழும் காலியிடம் ஒன்றை நிரப்புவதற்கு நியமிக்கப்பெற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் ஒருவர் எந்த உறுப்பினருடைய இடத்தில் நியமிக்கப் பெற்றிருக்கிறாரோ அந்த உறுப்பினரின் எஞ்சிய பதவிக் காலத்திற்குத் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(6) ஆட்சிமன்றமானது, ஆட்சிமன்றத்தால் தீர்மானிக்கப்படலாகிறவாறு, அத்தகைய இடத்திலும் நேரத்திலும் ஓர் ஆண்டில் குறைந்தது இரண்டு முறையேனும் கூடுதல் வேண்டும்; மற்றும் அதன் கூட்டங்களில் அலுவல் நடத்துவது பொறுத்து அத்தகைய நெறிமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(7) இந்தப் பிரிவில் பிறவாறாக வகைசெய்யப்பட்டிருப்பது நீங்கலாக, பதவிவழி உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம், அவர் எந்தப் பதவியின் வழி ஓர் உறுப்பினராக இருந்து வருகிறாரோ அந்தப் பதவியை அவர் வகித்து வருகிற வரையில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

Vesting of properties.

5. On and from the date of commencement of this Act, subject to the other provisions of this Act, all properties which had vested in the Society, immediately before the commencement of this Act, shall on and from such commencement, vest in the Institute.

Effect of incorporation of Institute.

6. On and from the date of commencement of this Act,—

(*a*) any reference to the Society in any contract or other instrument shall be deemed as a reference to the Institute;

(*b*) all the rights and liabilities of the Society shall be transferred to, and be the rights and liabilities of, the Institute;

(*c*) every person employed by the Society, immediately before the appointed day, shall hold office or service in the Institute by the same tenure, at the same remuneration and upon the same terms and conditions and with the same rights and privileges as to pension, leave, gratuity, provident fund and other matters as he would have held the same, if this Act had not been passed, and shall continue to be so, unless and until his employment is terminated or until such tenure, remuneration, terms and conditions are duly altered by the Statutes:

Provided that if the alteration so made is not acceptable to such employee, his employment may be terminated by the Institute in accordance with the terms of the contract with the employee or, if no provision is made therein in this behalf, on payment to him by the Institute of compensation equivalent to three months' remuneration in the case of permanent employee and one month's remuneration in the case of other employee;

5. இந்தச் சட்டத்தின் தொடக்கதேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு உடன் முன்பு, சங்கத்தில் உற்றமைந்திருந்த அனைத்து சொத்துக்களும், அத்தகைய தொடக்கநிலையன்றும் அது முதற்கொண்டும் நிறுவனத்தில் உற்றமைதல் வேண்டும். சொத்துக்கள் உற்றமைதல்.

6. இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியன்றும் அது முதற்கொண்டும்,– நிறுவனத்தைக் கூட்டுருமமாகப் பதிவு.

(அ) ஒப்பந்தம் அல்லது பிற முறையாவணம் எதிலும் சங்கத்திற்கான சுட்டுகை எதுவும் நிறுவனத்திற்கான ஒரு சுட்டுகையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) சங்கத்தின் அனைத்து உரிமைகளும் கடப்பாடுகளும் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு, அதன் உரிமைகளாகவும் கடப்பாடுகளாகவும் இருத்தல் வேண்டும்;

(இ) குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு சங்கத்தால் வேலைக்கமர்த்தப்பெற்ற ஒவ்வொரு நபரும், இந்தச் ச டம் இயற்றப்படாமல் இருந்திருக்குமானால் அவர் கொண்டிருந்திருக்கக்கூடிய அதே பதவியுரிமைக் காலத்திற்கும், அதே பணியூதியத்திலும் மற்றும் அதே வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும் மற்றும் ஓய்வூதியம், விடுப்பு, பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதியம் மற்றும் பிற பொருட்பாடுகள் குறித்து அதே உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுடனும் நிறுவனத்தில் பதவியை அல்லது பணியை வகித்து வருதல் வேண்டும்; மற்றும் அவருடைய வேலையமர்த்தம் முடிவுறுத்தப்பட்டாலன்றி அது வரையிலுமோ அல்லது அத்தகைய பதவியுரிமைக் காலம், பணியூ யம், வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள் நிலையமைவிதிகளால் உரியவாறு மாற்றம் செய்யப்படும் வரையிலுமோ அவ்வாறு தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்:

**வரம்புரையாக:** அவ்வாறு செய்யப்பட்ட மாற்றம் அத்தகையப் பணியாளருக்கு ஒத்துக்கொள்ளத்தக்கதாக இல்லையாயின், பணியாளருடனான ஒப்பந்தத்தின் வரையுரைகளின்படியோ அல்லது இதன்பொருட்டு அதில் வகையம் எதுவும் செய்யப்படவில்லையாயின், நிலையான பணியாளரின் நேர்வில் மூன்று மாதங்களுக்கான பணியூதியத்திற்கு மற்றும் பிற பணியாளரின் நேர்வில் ஒரு மாதத்திற்கான பணியூதியத்திற்குச் சமமான சரியீடு நிறுவனத்தால் அவருக்கு வழங்குவதன் பேரிலோ அவருடைய வேலையமர்த்தம் முடிவுறுத்தப்படலாம்;

(*d*) every person pursuing, before the date of commencement of this Act, any academic or research course in existing Institute campus, shall be deemed to have migrated and registered with the corresponding Institute campus on such commencement at the same level of study in the Institute campus from which such person migrated; and

(*e*) all suits and other legal proceedings instituted or which could have been instituted by or against the Society, immediately before the commencement of this Act shall be continued or instituted by or against the Institute.

Functions of Institute.

7. The functions of the Institute shall be—

(*i*) to nurture and promote quality and excellence in education and research in the areas of footwear and leather products design and development and allied fields thereof;

(ii) develop and conduct courses leading to graduate and post-graduate degrees, doctoral and post-doctoral courses and research in the areas of footwear and leather products design and development and allied fields thereof;

(iii) to hold examinations and grant degrees, diplomas, certificates, or any other qualification;

(iv) to institute fellowships, scholarships and confer awards, honorary degrees or other academic distinctions or titles;

(ஈ) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பு, நிலவுறும் நிறுவன வளாகத்தில் கல்விசார் அல்லது ஆராய்ச்சிப் பயிற்சி எதனையும் தொடரும் ஒவ்வொரு நபரும், அத்தகைய தொடக்கத்தின்பேரில் அத்தகைய நபர் எந்த நிறுவன வளாகத்திலிருந்து இடம் பெயர்ந்தாரோ அந்த நிறுவனத்தின் கல்வியின் அதே நிலையில் நேரிணையான நிறுவன வளாகத்திற்கு இடம்பெயர்ந்து அதனுடன் பதிவுபெற்றிருப்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(உ) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு உடன் முன்பு, சங்கத்தாலோ அல்லது அதற்கு எதிராகவோ தொடரப்பட்ட அல்லது தொடரப்பட்டிருக்கக்கூடிய அனைத்து உரிமைவழக்குகளும் பிற சட்ட நடவடிக்கைகளும் நிறுவனத்தாலோ அல்லது அதற்கு எதிராகவோ தொடர்ந்து நடத்தப்படுதலோ அல்லது தொடரப்படுதலோ வேண்டும்.

நிறுவனத்தின் செயற்பணிகள்.

7. நிறுவனத்தின் செயற்பணிகளாவன—

(i) காலணி மற்றும் தோல் ஆகுபொருள்கள் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு செயற்கூறுகளிலும் அதன் தொடர்புடைய செயற்களங்களிலும் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றிலும் தரத்தையும் சீர்மிகுமையையும் பேணிவளர்த்தல் மற்றும் மேம்படுத்துதல்;

(ii) காலணி மற்றும் தோல் ஆகுபொருள்கள் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு செயற்கூறுகளிலும் அதன் தொடர்புடைய செயற்களங்களிலும் பட்ட மற்றும் பட்ட மேற்படிப்புப் பட்டங்கள், முனைவர் மற்றும் முனைவர் மேற்படிப்புகள் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு இட்டுச்செல்லும் கல்விப்பயிற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் நடத்துதல்;

(iii) தேர்வுகள் நடத்துதல் மற்றும் பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ்கள் அல்லது பிற தகுதிப்பாடு எதனையும் வழங்குதல்;

(iv) புத்தாய்வுமாணவர்நிலைகளையும், படிப்பு உதவித்தொகைகளையும் நிறுவுதல்; மற்றும் விருதுகள், மதிப்புறு பட்டங்கள் அல்லது பிற கல்விசார் தனிச்சிறப்புகள் அல்லது சிறப்புப்பட்டங்களை அளித்தல்;

(*v*) to co-operate, associate and collaborate with educational or other institutions, research organisations or bodies corporate in any part of the world having objects wholly or partly similar to those of the Institute by exchange of faculty members, students, staff and scholars and generally in such manner as may be conducive to their common objective;

(*vi*) to conduct courses for teachers, technologists and other professionals in the areas of footwear and leather products design and development and allied fields thereof;

(vii) to undertake research, survey, and studies and application thereof, for improved quality and design, testing, and international marketing;

(viii) to provide consultancy, testing, inspection, certification, project implementation and design support to the institutions and industries in any part of the world;

(ix) to develop an international centre for creation and transmission of information, with focus on educational, professional and industrial commitments;

(x) to conduct skill development programs and to provide technical assistance to artisans, craftsmen, manufacturers, designers and exporters;

(v) முழுவதுமாகவோ பகுதியளவிலோ நிறுவனத்தினுடைய ஒத்த நோக்கங்களைக் கொண்ட, உலகத்தின் எந்தவொரு பகுதியிலுமுள்ள கல்விசார் அல்லது பிற நிறுவனங்கள், ஆராய்ச்சி அமைப்புகள் அல்லது கூட்டுரும மங்களுடன் புலஉறுப்பினர்கள், மாணவர்கள், பணியாளர் தொகுதியினர் மற்றும் அறிஞர்கள் பரிமாற்ற ஏற்பாடுகள் மூலமாக மற்றும் பொதுவாக அவற்றின் பொதுவான நோக்கங்களுக்கு ஏதுவாகயிருக்கலாகும் அத்தகைய முறையில் அவற்றுடன் ஒத்துச் செயலாற்றுதல், இணைந்திருத்தல் மற்றும் உடனிணைந்து செயலாற்றுதல்;

(vi) காலணி மற்றும் தோல் ஆகுபொருள்கள் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு செயற்கூறுகளிலும் அதன் தொடர்புடைய செயற்களங்களிலும் ஆசிரியர்களுக்கும், தொழில்நுட்பவியலர்களுக்கும் மற்றும் பிற விழைதொழிலர்களுக்கும் கல்விப் பயிற்சியளித்தல்;

(vii) மேம்பட்ட தரம் மற்றும் வடிவமைப்பு, சோதனை மற்றும் பன்னாட்டிடை சந்தைப் படுத்துதலுக்கான ஆராய்ச்சி, மதிப்பாய்வு மற்றும் ஆய்வுகள் மேற்கொண்டு அதனைப் பயன்படுத்துதல் ;

(viii) உலகத்தின் எந்தவொரு பகுதியிலுமுள்ள நிறுவனங்களுக்கும் விசைத்தொழில்களுக்கும் கலந்தாய்வுசெய்தல், சோதனைசெய்தல், ஆய்வுசெய்தல், உறுதிச்சான்றளித்தல், திட்டம் செயற்படுத்துதல் மற்றும் வடிவமைத்தல் ஆகியவற்றிற்கு ஆதரவு வழங்குதல்;

(ix) கல்விசார், விழைதொழில் மற்றும் விசைத்தொழில் பொறுப்புகள் மீது மையமாகக்கொண்டு, தகவல் உருவாக்கத்திற்காகவும் அனுப்பீட்டிற்காகவும் பன்னாட்டு மையம் ஒன்றை மேம்படுத்துதல்;

(x) தனித்திறன் மேம்பாட்டுச் செயல்முறை வகுப்புகள் நடத்துதல் மற்றும் கைவினைஞர்கள், கைத்தொழில் வல்லுநர்கள், உற்பத்தியாளர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஆகியோருக்குத் தொழில்நுட்ப உதவி வழங்குதல்;

(xi) to design, develop, amend, update curriculums of the academic programs and training materials as per the sector's requirement and change of technology;

(xii) to acquire any patent or license relating to such invention, improvement or design or standardisation marks whether for general or specific purposes;

(xiii) to establish, form and maintain museums, libraries and collections of literature and films, slides, photographs, prototypes and other information;

(xiv) to function as a National resource centre for curriculum development, training the trainers and support skill development in the leather sector overall;

(xv) to frame the Statutes and the Ordinances and to alter, modify or rescind the same; and

(xvi) to do all such things as may be necessary, incidental or conducive to the attainment of all or any of the objects of the Institute.

Powers of Governing Council.

8. (1) Subject to the provisions of this Act, the Governing Council, under overall control of the Central Government, shall be responsible for the general superintendence, direction and control of the affairs of the Institute and shall exercise all the powers not otherwise provided for by this Act, the Statutes and the Ordinances, and shall have the power to review the acts of the Senate.

(xi) துறையின் தேவைக்கும் தொழில்நுட்ப மாற்றத்திற்கும் ஏற்ப கல்விசார் செயல்முறை வகுப்புகளையும் பயிற்சிப் பாடப்பொருள்களையும் வடிவமைத்தல், மேம்படுத்துதல், திருத்தம் செய்தல், பாடத்திட்டங்களை நாளது தேதிவரையாக்குதல்;

(xii) அத்தகைய புத்தாக்கப் புனைவு, வளர்ச்சி அல்லது வடிவமைப்பு அல்லது தரஅளவுப்பாட்டுக் குறியீடுகள் தொடர்பாக பொதுவான அல்லது குறிப்பான பயன்பாட்டிற்காக புதுப்புனைவுரிமை அல்லது உரிமம் எதுவும் பெறுதல்;

(xiii) அருங்காட்சியகங்கள், நூலகங்களை நிறுவி, அமைத்து மற்றும் பேணிவருதல் மற்றும் தனித்துறைத் தகவலேடு, நிழற்படச் சுருள்கள், ஒளிப்படத்தகடுகள், நிழற்படங்கள், மூலமுன்மாதிரி, பிற தகவல்கள் ஆகியவற்றைச் சேகரித்தல்;

(xiv) தோல் துறைக்களத்தில் பாடத்திட்ட மேம்பாடு மற்றும் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் தனித்திறன் மேம்பாட்டிற்கு ஆதரவளித்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்தமான ஒரு தேசிய வள ஆதாரமையமாகச் செயலுறுதல்;

(xv) நிலையமைவிதிகளையும், நெறியமை விதிகளையும் வனைதல் மற்றும் அவற்றை மாற்றம் செய்தல், மாற்றமைவு செய்தல் அல்லது அழித்தறவு செய்தல்; மற்றும்

(xvi) நிறுவனத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் அடைவதற்கு தேவைப்படலாகும், சார்வுறுவான அல்லது ஏதுவான அத்தகைய செயல்கள் அனைத்தையும் செய்தல்.

ஆட்சி மன்றத்தின் அதிகாரங்கள்.

8. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, ஆட்சி மன்றமானது, மைய அரசின் ஒட்டுமொத்த கட்டாள்கையின் கீழ், நிறுவனத்தின் அலுவற்பாடுகளின் பொதுவான கண்காணிப்பு, நெறியாள்கை மற்றும் கட்டாள்கை ஆகியவற்றிற்குப் பொறுப்புடையதாகும்; மற்றும் இந்தச் சட்டத்தாலும், நிலையமைவிதிகளாலும் மற்றும் நெறியமைவிதிகளாலும் பிறவாறாக வகைசெய்யப்படாத அனைத்து அதிகாரங்களையும் செலுத்துதல் வேண்டும்; மற்றும் ஆட்சிக்குழுவின் செயல்பாடுகளை மறுஆய்வு செய்வதற்கு அதிகாரம் உடையதும் ஆகும்.

(2) Without prejudice to the provisions of sub-section (*1*), the Governing Council shall—

(*a*) take decisions on questions of policy relating to the administration and working of the Institute;

(*b*) institute academic and other posts and to make appointments thereto (except in the case of the Managing Director, Secretary and Executive Director);

(*c*) frame the Statutes and the Ordinances and to alter, modify or rescind the same;

(*d*) consider and pass resolutions on the annual report, the annual audited accounts and the budget estimates of the Institute for the next financial year as it thinks fit together with a statement of its development plans;

(*e*) receive gifts, grants, donations or benefactions from the Government and to receive bequests, donations and transfers of movable or immovable properties from the testators, donors or transferors, as the case may be; and

(*f*) do all such things as may be necessary, incidental or conducive to the attainment of all or any of the aforesaid powers.

(3) The Governing Council shall have the power to appoint such committees, as it considers necessary for the exercise of its powers and the performance of its duties under this Act.

(2). (1) ஆம் உட்பிரிவின் வகையங்களுக்குக் குந்தகமின்றி, ஆட்சி மன்றம்—

(அ) நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் செயல்பாடு தொடர்பான கொள்கைப் பிரச்சனைகள் மீது முடிபுகள் எடுத்தல் வேண்டும்;

(ஆ) கல்விசார் மற்றும் பிற பணியிடங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றிற்கு அமர்த்தங்கள் செய்தல் வேண்டும். (மேலாண்மை இயக்குநர், செயலாளர் மற்றும் நிருவாக இயக்குநர் நேர்வு நீங்கலாக) ;

(இ) நிலையமைவிதிகளையும் நெறியமை விதிகளையும் வனைதல் மற்றும் அவற்றை மாற்றம் செய்தலோ, மாற்றமைவு செய்தலோ அல்லது அழித்தறவு செய்தலோ வேண்டும்;

(ஈ) நிறுவனத்தின் ஆண்டறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகள் மற்றும் அடுத்த நிதி ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் ஆகியவற்றின் மீது தான் பொருத்தமெனக் கருதுகிறவாறு, அதன் மேம்பாட்டுத் திட்டங்களுடன் சேர்த்து ஓர்வு செய்து தீர்மானங்கள் நிறைவேற்றுதல் வேண்டும்;

(உ) அரசிடமிருந்து பரிசுப் பொருள்கள், மானியங்கள், நன்கொடைகள் அல்லது அறக்கொடைகள் பெறுதலும் மற்றும் நேர்வுக்கேற்ப, விருப்புறுதியாளர்கள், கொடையாளர்கள் அல்லது உரிமைமாற்றம் செய்பவர்களிடமிருந்து அசையும் அல்லது அசையாச் சொத்துக்களுக்கான விருப்புறுதிவழிக்கொடைகள், நன்கொடைகள் மற்றும் உரிமைமாற்றங்கள் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்; மற்றும்

(ஊ) மேலேகண்ட அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் அடைவதற்கு தேவைப்படலாகும் சார்வுறுவான அல்லது ஏதுவான அத்தகைய செயல்கள் அனைத்தையும் செய்தல் வேண்டும்.

(3) ஆட்சி மன்றமானது, இந்தச் சட்டத்தின்படி அதன் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் மற்றும் அதன் கடமைகளைப் புரிவதற்கும் அது தேவையெனக் கருதுகிறவாறு, அத்தகைய குழுக்களை அமர்த்துவதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) Notwithstanding anything contained in sub-section (2) of section 4, the Governing Council shall not dispose of in any manner any immovable property without the prior approval of the Central Government.

(*5*) The Central Government may appoint one or more persons to review the work and progress of the Institute and to hold inquiries into the affairs thereof and to report thereon in such manner as the Central Government may direct.

(6) Upon receipt of any such report, the Central Government may take such action and issue such directions as it considers necessary in respect of any of the matters dealt within the report and the Institute shall be bound to comply with such directions.

(7) The Central Government shall have the power to remove Chairperson or other Members or reconstitute the Governing Council, if it considers it appropriate to do so.

(8) No Chairperson or Member shall be removed under sub-section (7) unless he has been given a reasonable opportunity of being heard in the matter.

Institute be open to all races, creeds and classes.

9. (1) The Institute shall be open to persons of all sex and of whatever race, creed, caste or class, and no test or condition shall be imposed as to religious belief or profession in admitting or appointing members, students, teachers or workers or in any other connection whatsoever.

(4). 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஆட்சி மன்றமானது, மைய அரசின் முன் ஒப்பேற்பின்றி அசையாச் சொத்து எதனையும் எந்தவொரு முறையிலும் அயலடைவு செய்தல் ஆகாது.

(5) மைய அரசானது, நிறுவனத்தின் செயல்பாட்டையும் முன்னேற்றத்தையும் மறுஆய்வு செய்வதற்கும் மற்றும் அவற்றின் அலுவற்பாடுகளில் விசாரணைகள் செய்வதற்கும் மற்றும் அதன்மீது மைய அரசு பணிக்கிறவாறு அத்தகைய முறையில் அறிக்கையனுப்புவதற்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை அமர்த்தலாம்.

(6) அத்தகைய அறிக்கை எதனையும் பெறுவதன் பேரில், மைய அரசானது, அறிக்கையில் கையாளப்பட்ட பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்து அது தேவையெனக் கருதுகிறவாறு அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளலாம் மற்றும் அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்; மற்றும் நிறுவனம் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடக்கக் கட்டுப்பட்டது ஆகும்.

(7) மைய அரசானது, அவ்வாறு செய்வது பொருத்தமெனக் கருதுமாயின், தலைமையரை அல்லது பிற உறுப்பினர்களை நீக்குவதற்கோ அல்லது ஆட்சி மன்றத்தை மறுஅமைப்பாக்கம் செய்வதற்கோ அதிகாரம் உடையது ஆகும்.

(8) தலைமையரோ அல்லது உறுப்பினரோ, (7) ஆம் உட்பிரிவின்படி நீக்கப்படும் பொருட்பாட்டில் அவர் கேட்கப்படுவதற்கு தகுமான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி நீக்கப்படுதல் ஆகாது.

நிறுவனமானது, அனைத்து இனங்களுக்கும், சமயக் கோட்பாடுகளுக்–கும் வகுப்புகளுக்கும் பொதுவானதாகும்.

9. (1) நிறுவனமானது, அனைத்துப் பாலினத்தவர்க்கும் சார்ந்ததாக மற்றும் இனம், சமயக் கோட்பாடு, சாதி அல்லது வகுப்பு எதுவாயினும், அந்த நபர்களுக்குப் பொதுவானதாக இருத்தல் வேண்டும் மற்றும் உறுப்பினர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் அல்லது பணியாளர்களைச் சேர்ப்பதிலோ அல்லது அமர்த்துவதிலோ அல்லது எதுவேயாயினும் பிற தொடர்பு எதிலுமோ சமய நம்பிக்கை அல்லது ஓம்புகை குறித்து தேர்வாய்வோ அல்லது வரைக்கட்டோ விதிக்கப்படுதல் ஆகாது.

(*2*) No bequest, donation or transfer of any property shall be accepted by the Institute, which in the opinion of the Governing Council involves conditions or obligations opposed to the spirit and object of this section.

Teaching at Institute.

10. All teaching at the campuses of the Institute shall be conducted by or in the name of the Institute in accordance with the Statutes and the Ordinances made in this behalf.

Visitor.

11. The President of India shall be the Visitor of the Institute.

Authorities of Institute.

12. The following shall be the authorities of the Institute, namely:—

(a) a Governing council;

(b) a Senate; and

(*c*) such other authorities as may be declared by the Statutes to be the authorities of the Institute.

The Senate.

13. The Senate of the Institute shall consist of the following persons, namely:—

(*a*) the Managing Director, *ex officio* who shall be the Chairperson of the Senate;

(*b*) the Secretary, *ex officio*;

(*c*) the Executive Directors of all Institute campus, *ex officio*;

(d) all Senior Professors of the Institute;

(*e*) three persons, not being employees of the Institute, to be nominated by the Chairperson in consultation with the Managing Director, from amongst educationists of repute, from the fields of footwear, science, engineering and humanities and one of them shall be woman;

(2) இந்தப் பிரிவின் உட்கருத்திற்கும் நோக்கத்திற்கும் எதிரான வரைக்கட்டுகளுக்கோ அல்லது கடமைப்பாடுகளுக்கோ உள்ளாகிறது என்று ஆட்சி மன்றம் கருதும் எந்தவொரு விருப்புறுதிவழிக்கொடை, நன்கொடை அல்லது சொத்துரிமை மாற்றம் எதுவும் நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது.

நிறுவனத்தில் கல்வி கற்பித்தல்.

10. நிறுவனத்தின் வளாகங்களில் கல்விகற்பித்தல் அனைத்தும் இதற்கென செய்யப்பட்ட நிலையமை விதிகளுக்கும் நெறியமைவிதிகளுக்கும் இணங்க நிறுவனத்தால் அல்லது அதன் பெயரால் நடத்தப்படுதல் வேண்டும்.

மேற்பார்வையீட்–டாளர்.

11. இந்தியக் குடியரசுத் தலைவர் நிறுவனத்தின் மேற்பார்வையீட்டாளராக இருப்பார்.

நிறுவனத்தின் அதிகார–அமைப்புகள்.

12. பின்வருவன, நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள் ஆகும், அவையாவன:–

(அ) ஓர் ஆட்சி மன்றம்;

(ஆ) ஓர் ஆட்சிக்குழு; மற்றும்

(இ) நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகளென நிலையமைவிதிகளால் விளம்பப்படலாகும் அத்தகைய பிற அதிகாரஅமைப்புகள்.

ஆட்சிக்குழு.

13. நிறுவனத்தின் ஆட்சிக்குழு, பின்வரும் நபர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அவர்களாவர்:–

(அ) மேலாண்மை இயக்குநர், பதவிவழி, அவர், ஆட்சிக்குழுவின் தலைமையராக இருப்பார்;

(ஆ) செயலாளர், பதவிவழி;

(இ) நிறுவன வளாகத்தின் அனைத்து நிருவாக இயக்குநர்கள், பதவிவழி;

(ஈ) நிறுவனத்தின் அனைத்து மூத்த பேராசிரியர்கள்;

(உ) காலணி, அறிவியல், பொறியியல் மற்றும் மனிதவியல்கள் ஆகிய செயற்களங்களில் புகழ்பெற்றக் கல்வியாளர்களிடையேயிருந்து, மேலாண்மை இயக்குநருடன் கலந்தாய்ந்து தலைமையரால் நியமிக்கப்பெற வேண்டிய, நிறுவனத்தின் பணியாளர்களாக இல்லாத மூன்று நபர்கள்; அவர்களில் ஒருவர் பெண்ணாக இருத்தல் வேண்டும்;

(*f*) one alumnus of the Institute to be nominated by the Chairperson in consultation with the Managing Director by rotation; and

(g) such other members of the staff as may be laid down in the Statutes.

Functions of Senate.

14. (1) Subject to the provisions of this Act, the Statutes and the Ordinances, the Senate of the Institute shall be the principal academic body of the Institute and shall have the control and general regulation, and be responsible for the maintenance of standards of instruction, education and examinations in the Institute and shall exercise such other powers and perform such other duties as may be conferred or imposed upon it by the Statutes.

(*2*) Without prejudice to the provisions of sub-section (*1*), the Senate shall have the following powers, namely:—

(*a*) to specify the criteria and process for admission to courses or programmes of study by the Institute;

(*b*) to recommend to the Governing Council for creation of teaching and other academic posts, determination of number and emoluments of such posts and defining the duties and conditions of service of teachers and other academic posts;

(*c*) to recommend to the Governing Council for commencement of new programmes and course of study;

(ஊ) மேலாண்மை இயக்குநருடன் கலந்தாய்ந்து தலைமையரால் சுழற்சி முறையில் நியமிக்கப்பெற வேண்டிய நிறுவனத்தின் ஒரு முன்னாள் மாணவர்; மற்றும்

(எ) நிலையமைவிதிகளில் விதிக்கப்படலாகிறவாறு அத்தகைய பிற பணியாளர் தொகுதி உறுப்பினர்கள்.

ஆட்சிக்குழுவின் செயற்பணிகள்.

14. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும், நிலையமைவிதிகள் மற்றும் நெறியமைவிதிகளுக்கும் உட்பட்டு, நிறுவனத்தின் ஆட்சிக்குழுவானது, நிறுவனத்தின் முதன்மைக் கல்விசார் குழுமமாக இருத்தல் வேண்டும்; மற்றும் நிறுவனத்தில் கற்பித்தல், கல்வி மற்றும் தேர்வுகள் ஆகியவற்றின் தரநிலைகளைப் பேணிவருவதற்கான கட்டாள்கையையும் பொதுவான ஒழுங்குமுறையையும் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் அவற்றிற்குப் பொறுப்புடையதும் ஆகும்; மற்றும் நிலையமைவிதிகளால் அதற்கு அளிக்கப்படலாகும் அல்லது விதிக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய பிற கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின் வகையங்களுக்குக் குந்தகமின்றி ஆட்சிக்குழுவானது, பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:–

(அ) நிறுவனத்தால் பாடவகைப் பயிலாறுகளுக்கும் செயல்முறை வகுப்புகளுக்கும் சேர்க்கைக்கான அடிப்படை நியதியையும் செயல்முறையையும் குறித்துரைத்தல்;

(ஆ) ஆசிரியர் மற்றும் பிற கல்விசார் பணியிடங்களை உருவாக்குவதற்காகவும், அத்தகைய பணியிடங்களுக்கான எண்ணிக்கையையும் பதவியூதியங்களையும் தீர்மானிப்பதற்காகவும் ஆட்சி மன்றத்திற்குப் பரிந்துரைத்தல்; மற்றும் ஆசிரியர்கள் மற்றும் பிற கல்விசார் பணியிடங்களுக்குரிய கடமைகளையும் பணி வரைக் கட்டுகளையும் வரையறுத்தல்;

(இ) புதிய செயல்முறை வகுப்புகளையும் பாடவகைப் பயிலாறுகளையும் தொடங்குவதற்காக ஆட்சி மன்றத்திற்குப் பரிந்துரைத்தல்;

(*d*) to specify academic contents of programmes and course of study and to undertake modifications therein;

(*e*) to specify the academic calendar and approve grant of degrees, diplomas and other academic distinctions or titles; and

(*f*) to exercise such other powers and discharge such other functions as may be assigned to it, by Statutes or by the Governing Council.

Functions, powers and duties of Chairperson.

15. (1) The Chairperson shall ordinarily preside at the meetings of the Governing Council and at the Convocations of the Institute.

(2) The Chairperson shall exercise such other powers and perform such other duties as may be assigned to him by this Act or the Statutes.

(3) The Chairperson shall have the authority to review periodically the work and progress of the Institute and to order enquiries into the affairs of the Institute.

Managing Director.

16. (1) The Managing Director of the Institute shall be appointed by the Central Government for a tenure of five years and on such terms and conditions of services as may be prescribed.

(2) The Managing Director shall be the principal executive officer of the Institute and shall be responsible for the proper administration of the Institute and for imparting of instruction and maintenance of discipline therein.

(3) The Managing Director shall exercise such other powers and perform such other duties as may be assigned to him by this Act, the Statutes and the Ordinances or delegated by the Governing Council or the Senate.

(ஈ) செயல்முறை வகுப்புகள் மற்றும் பாடவகைப் பயிலாறுகளின் கல்விசார் பொருள்களைக் குறித்துரைத்தல் மற்றும் அவற்றில் மாற்றமைவுகளை மேற்கொள்ளுதல்;

(உ) கல்வியாண்டு நாட்காட்டியைக் குறித்துரைத்தல் மற்றும் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விசார் தனிச்சிறப்புகள் அல்லது சிறப்புப்பட்டங்கள் வழங்குவதற்கு ஒப்பேற்பளித்தல்; மற்றும்

(ஊ) நிலையமைவிதிகளாலோ அல்லது ஆட்சி மன்றத்தாலோ, அதற்குக் குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதல் மற்றும் அத்தகைய பிற செயற்பணிகளை ஆற்றுதல்.

தலைமையருக்–குள்ள செயற்பணிகள், அதிகாரங்கள்.

15. (1) தலைமையர், பொதுவாக ஆட்சி மன்றத்தின் கூட்டங்களிலும் நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாக்களிலும் தலைமைவகிப்பார்.

(2) தலைமையர், இந்தச் சட்டத்தாலோ அல்லது நிலையமைவிதிகளாலோ அவருக்குக் குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துவதுடன் அத்தகைய பிற கடமைகளைப் புரிவார்.

(3) தலைமையர், நிறுவனத்தின் செயல்பாட்டையும் முன்னேற்றத்தையும் காலமுறையாக மறுஆய்வு செய்வதற்கும் நிறுவனத்தின் அலுவற்பாடுகள் குறித்து விசாரணைகள் செய்வதற்கு ஆணையிடுவதற்கும் அதிகாரம் கொண்டிருப்பார்.

மேலாண்மை இயக்குநர்.

16. (1) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், ஐந்தாண்டு காலமுறை ஒன்றுக்கு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில் மைய அரசால் அமர்த்தப்பெறுவார்.

(2) மேலாண்மை இயக்குநர், நிறுவனத்தின் முதன்மை நிருவாக அலுவலராக இருப்பார்; மற்றும் நிறுவனத்தின் முறையான நிருவாகத்திற்கும் கற்பித்தலுக்கும் அதில் ஒழுங்குக்கட்டுப்பாட்டைப் பேணிவருவதற்கும் பொறுப்புடையவராவார்.

(3) மேலாண்மை இயக்குநர், இந்தச் சட்டத்தாலும், நிலையமைவிதிகள் மற்றும் நெறியமைவிதிகளாலும் அவருக்குக் குறித்தளிக்கப்படலாகும் அல்லது ஆட்சி மன்றத்தாலோ அல்லது ஆட்சிக்குழுவாலோ ஒப்படைக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துவதுடன் அத்தகைய பிற கடமைகளைப் புரிவார்.

(4) The Managing Director shall submit annual reports and accounts to the Governing Council.

(*5*) The Central Government shall have the power to remove the Managing Director before the tenure of five years, if it considers it appropriate to do so on the grounds of misconduct or incapacity after giving him an opportunity of being heard in the matter.

(*6*) The Managing Director shall be responsible for the implementation of the decision of the Governing Council and the Senate.

Secretary.

17. (1) The Secretary of the Institute shall be appointed by the Central Government for a tenure of five years and on such terms and conditions of service as may be prescribed.

(2) The Secretary shall act as the Secretary of the Governing Council, the Senate and such committees as may be specified by the Statutes.

(3) The Secretary shall be responsible to the Managing Director for the proper discharge of his functions.

(4) The Secretary shall exercise such other powers and perform such other duties as may be assigned to him by this Act or the Statutes or the Managing Director.

Executive Director.

18. (1) The Executive Director of each Institute campus shall be appointed by the Central Government for a tenure of five years and on such terms and conditions as may be prescribed and shall exercise such powers and perform such duties as may be assigned to him by this Act or the Statutes or by the Managing Director.

(4) மேலாண்மை இயக்குநர், ஆட்சி மன்றத்திற்கு ஆண்டறிக்கைகளையும் கணக்குகளையும் பணிந்தனுப்புவார்.

(5) மைய அரசானது, மேலாண்மை இயக்குநரை நெறிதவறுகை அல்லது திறமையின்மையின் காரணங்களின் பேரில் அவ்வாறு செய்வது பொருத்தமென அது கருதுமாயின், அந்தப் பொருட்பாட்டில் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்றை அவருக்குக் கொடுத்த பின்பு, ஐந்தாண்டு காலமுறைக்கு முன்பாக அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கு அதிகாரம் உடையது ஆகும்.

(6) மேலாண்மை இயக்குநர், ஆட்சி மன்றம், ஆட்சிக்குழு ஆகியவற்றின் முடிபை செயற்படுத்துவதற்குப் பொறுப்புடையவர் ஆவார்.

செயலாளர்.

17. (1) நிறுவனத்தின் செயலாளர், ஐந்தாண்டு காலமுறை ஒன்றுக்கு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், மைய அரசால் அமர்த்தப் பெறுவார்.

(2) செயலாளர், ஆட்சி மன்றம், ஆட்சிக்குழு ஆகியவற்றிற்கும், நிலையமைவிதிகளால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய குழுக்களுக்கும் செயலாளராகச் செயலுறுவார்.

(3) செயலாளர், அவருடைய செயற்பணிகளை முறையாக ஆற்றிவருவதற்கு மேலாண்மை இயக்குநருக்குப் பொறுப்புடையவராவார்.

(4) செயலாளர், இந்தச் சட்டத்தாலோ அல்லது நிலையமைவிதிகளாலோ அல்லது மேலாண்மை இயக்குநராலோ அவருக்குக் குறித்தளிக்கப்படலாகிறவாறான அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துவதுடன் அத்தகைய பிற கடமைகளைப் புரிவார்.

நிருவாக இயக்குநர்.

18. (1) நிறுவன வளாகம் ஒவ்வொன்றின் நிருவாக இயக்குநரும் ஐந்து ஆண்டு காலமுறை ஒன்றுக்கு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின்பேரில் மைய அரசால் அமர்த்தப் பெறுவார்; மற்றும் இந்தச் சட்டத்தாலோ அல்லது நிலையமைவிதிகளாலோ அல்லது மேலாண்மை இயக்குநராலோ அவருக்குக் குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துவதுடன் அத்தகைய கடமைகளைப் புரிவார்.

(2) The Executive Director shall be the principal academic and executive officer of the Institute campus and shall be responsible for the implementation of the decision of the Governing Council and the Senate and the day-to-day administration of the Institute campus in consultation with the Managing Director.

Power and duties of other authorities and officers.

19. The powers and duties of authorities and officers, other than those herein before mentioned, shall be determined by the Statutes.

Grants by Central Government.

20. For the purpose of enabling the Institute to discharge its functions efficiently under this Act, the Central Government may, after due appropriation made by Parliament by law in this behalf, pay to the Institute in each financial year such sums of money and in such manner as it may think fit.

Funds of Institute.

21. (1) The Institute shall maintain a Fund to which shall be credited—

(a) all moneys provided by the Central Government;

(b) all fees and other charges received by the Institute;

(c) all moneys received by the Institute by way of loans, grants, gifts, donations, benefactions, bequests or transfers; and

(d) all moneys received by the Institute in any other manner or from any other source.

(2) நிருவாக இயக்குநர், நிறுவன வளாகத்தின் முதன்மைக் கல்வி மற்றும் நிருவாக அலுவலர் ஆவார்; மற்றும் ஆட்சி மன்றம் ஆட்சிக்குழு ஆகியவற்றின் முடிபினைச் செயல்படுத்துவதற்கும், மேலாண்மை இயக்குநருடன் கலந்தாய்ந்து நிறுவன வளாகத்தின் அன்றாட நிருவாகத்திற்கும் பொறுப்புடையவர் ஆவார்.

பிற அதிகார–அமைப்பு–களுக்கும் அலுவலர்க–ளுக்குமான அதிகாரங்களும் கடமைகளும்.

19. இதனில் இதன்முன்பு குறிப்பிடப்பட்டவையல்லாத பிற அதிகார அமைப்புகளுக்கும் அலுவலர்களுக்குமான அதிகாரங்களும் கடமைகளும், நிலையமைவிதிகளால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

மைய அரசால் வழங்கப்படும் மானியங்கள்.

20. இந்தச் சட்டத்தின்படி நிறுவனம் அதன் செயற்பணிகளைத் திறம்பட ஆற்றுவதை இயல்விக்கும் நோக்கத்திற்காக, மைய அரசானது, இதற்கென நாடாளுமன்றம் சட்டத்தின் வாயிலாக உரிய பணம் ஒதுக்களிப்புச் செய்த பின்பு, ஒவ்வொரு நிதியாண்டிலும் நிறுவனத்திற்கு அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய பணத்தொகைகளை அத்தகைய முறையில் வழங்குதல் வேண்டும்.

நிறுவனத்தின் நிதியங்கள்.

21. நிறுவனம், நிதியமொன்றைப் பேணிவருதல் வேண்டும்; அதில்–

(அ) மைய அரசால் வழங்கப்படும் அனைத்துப் பணமும்;

(ஆ) நிறுவனத்தால் பெறப்படும் அனைத்துக் கட்டணங்களும் பிற கட்டணத் தொகைகளும்;

(இ) பெறுகடன்கள், மானியங்கள், கொடைகள், நன்கொடைகள், அறக்கொடைகள், விருப்புறுதியாவணவழிக்கொடைகள் அல்லது உரிமை மாற்றங்கள் வழியாக நிறுவனத்தால் பெறப்படும் பணம் அனைத்தும்; மற்றும்

(ஈ) பிற முறை எதிலும் அல்லது பிற ஆதாரம் எதிலிருந்தும் நிறுவனத்தால் பெறப்படும் பணம் அனைத்தும்

வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(*2*) All moneys credited to the Fund shall be deposited in such banks or invested in such manner as the Institute may, with the approval of the Governing Council decide.

(*3*) The Fund shall be applied towards meeting the expenses of the Institute, including expenses incurred in the exercise of its powers and discharge of its duties under this Act.

Setting up of endowment fund.

22. Notwithstanding anything contained in section 21, the Central Government may direct the Institute to—

(a) set-up an endowment fund and any other fund for specified purpose; and

(*b*) transfer money from its Fund to endowment fund or any other fund.

Accounts and audit.

23. (1) The Institute shall maintain proper accounts and other relevant records and prepare an annual statement of accounts, including the balance sheet, in such form as may be specified, in accordance with such general directions as may be issued by the Central Government in consultation with the Comptroller and Auditor-General of India.

(*2*) The accounts of the Institute shall be audited by the Comptroller and Auditor-General of India and any expenditure incurred by him in connection with such audit shall be payable by the Institute to the Comptroller and Auditor-General of India.

(2) நிதியத்தில் வரவு வைக்கப்படும் பணம் அனைத்தும் நிறுவனம், ஆட்சி மன்றத்தின் ஒப்பேற்புடன் முடிபு செய்யலாகும் அத்தகைய வங்கிகளில் வைப்பீடு செய்யப்படுதலோ அல்லது அத்தகைய முறையில் முதலீடு செய்யப்படுதலோ வேண்டும்.

(3) நிதியமானது, நிறுவனம் இந்தச் சட்டத்தின்படி அதன் அதிகாரங்களைச் செலுத்துகையில் மற்றும் அதன் கடமைகளை ஆற்றுகையில் செய்ய நேரிட்ட செலவுகள் உள்ளடங்கலான, அதன் செலவுகளை எதிர்கொள்ளும் பொருட்டுப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

நிலைக் கட்டளை நிதியத்தை ஏற்படுத்துதல்.

22. 21 ஆம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசானது,–

(அ) நிலைக்கட்டளை நிதியம் ஒன்றையும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கான பிற நிதியம் எதனையும் நிறுவுமாறு; மற்றும்

(ஆ) அதன் நிதியத்திலிருந்து பணத்தை நிலைக்கட்டளை நிதியத்திற்கு அல்லது பிற நிதியம் எதற்கும் மாற்றுமாறு நிறுவனத்தைப் பணிக்கலாம்.

கணக்குகளும் தணிக்கையும்.

23. (1) நிறுவனமானது, இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையருடன் கலந்தாய்ந்து, மைய அரசால் வழங்கப்படலாகும் அத்தகைய பொதுவான பணிப்புரைகளுக்கிணங்க, குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்தில் ஐந்தொகைக்குறிப்பு உள்ளடங்கலான, முறையான கணக்குகளையும் மற்றும் பிற தொடர்புடைய பதிவணங்களையும் பேணிவருதலும் மற்றும் ஆண்டுக் கணக்குகளின் விவரவுரை ஒன்றைத் தயாரித்தலும் வேண்டும்.

(2) நிறுவனத்தின் கணக்குகள், இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரால் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தணிக்கை தொடர்பாக அவரால் செய்ய நேரிட்ட செலவினம் எதுவும் நிறுவனத்தால் இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(*3*) The Comptroller and Auditor-General of India and any person appointed by him in connection with the audit of the accounts of the Institute shall have the same rights, privileges and authority in connection with such audit as the Comptroller and Auditor-General of India, generally has in connection with the audit of the Government accounts, and, in particular, shall have the right to demand the production of books, accounts, connected vouchers and other documents and papers and to inspect any of the offices of the Institute.

(*4*) The accounts of the Institute as certified by the Comptroller and Auditor-General of India any other person appointed by him in this behalf, together with the audit report thereon shall be forwarded annually to the Central Government and that Government shall cause the same to be laid before each House of Parliament.

Pension and provident fund.

24.(1) The Institute shall constitute, for the benefit of its employees, including the Managing Director in such manner and subject to such conditions as may be specified by the Statutes, such pension, insurance and provident funds as it may consider necessary.

(*2*) Where any such provident fund has been so constituted, the Central Government may declare that the provisions of the Provident Funds Act, 1925 , shall apply to such fund as if it were a Government Provident Fund. 19 / 1925.

Appointment.

25. All appointments of the staff of the Institute, except that of the Managing Director, Secretary and Executive Director shall be made in accordance with the procedure laid down in the Statutes by —

(3) இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரும் மற்றும் நிறுவனத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக அவரால் அமர்த்தப்பெற்ற நபர் எவரும், அரசு கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக, பொதுவாக இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் கொண்டிருக்கும் அதே உரிமைகளும், சிறப்புரிமைகளும் மற்றும் அதிகாரஅடைவும் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும் குறிப்பாக புத்தகங்கள், கணக்குகள், தொடர்புடைய செலவுச் சீட்டுகள் மற்றும் பிற ஆவணங்கள் மற்றும் தாள் ஆவணங்கள் ஆகியவற்றை முன்னிடக் கோருவதற்கும் மற்றும் நிறுவனத்தின் அலுவலகங்களில் எதனையும் ஆய்வு செய்வதற்குமான உரிமையை அத்தகைய தணிக்கை தொடர்பாக கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இந்தியக் கணக்காய்வர் – தலைமைத் தணிக்கையராலோ அல்லது இதற்கென அவரால் அமர்த்தப்பெற்ற பிற நபர் எவராலுமோ உறுதிச் சான்றளிக்கப்பட்டவாறான நிறுவனத்தின் கணக்குகள், அதன் மீதான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆண்டுதோறும் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அந்த அரசு அதனை நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படச்செய்தல் வேண்டும்.

ஓய்வூதியம் மற்றும் வருங்கால வைப்பு நிதியம்.

24. (1) நிறுவனமானது, மேலாண்மை இயக்குநர் உள்ளடங்கலான அதன் பணியாளர்களின் நலப்பயனுக்காக, நிலையமைவிதிகளால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, அது தேவையெனக் கருதுகிறவாறு அத்தகைய ஓய்வூதிய, காப்பீட்டு மற்றும் வருங்காலவைப்பு நிதியங்களை உருவாக்குதல் வேண்டும்.

(2) அத்தகைய வருங்காலவைப்பு நிதியம் எதுவும் அவ்வாறாக உருவாக்கப்பட்டிருக்கிறவிடத்து, மைய அரசானது, அத்தகைய நிதியம், ஓர் அரசு வருங்கால வைப்பு
19/1925. நிதியமாக இருந்தாற்போன்று, வருங்கால வைப்பு நிதியங்கள் சட்டம், 1925 இன் வகையங்கள் அத்தகைய நிதியத்திற்குப் பொருந்துதல் வேண்டும் என விளம்புகை செய்யலாம்.

அமர்த்தம்.

25. நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயலாளர் மற்றும் நிருவாக இயக்குநருக்கான அமர்த்தங்கள் தவிர, பணியாளர் தொகுதிக்கான அமர்த்தங்கள் அனைத்தும் நிலையமைவிதிகளில் விதிக்கப்பட்ட நெறிமுறையின்படி–

(*a*) the Governing Council, if the appointment is made on the academic staff in the post of Assistant Professor or above or if the appointment is made on the non-academic staff in any cadre, the maximum of the pay scale for which is the same or higher than that of Assistant Professor; and

(b) the Managing Director, in any other case.

Statutes.

26. Subject to the provisions of this Act, the Statutes may provide for all or any of the following matters, namely:—

(*a*) the formation of departments of teaching, centre of research, establishment of workshops, laboratories, studios;

(b) the institution of fellowships, scholarships, exhibitions, medals and prizes;

(c) the classification, term of office, qualification, the method of appointment and the determination of the terms and conditions of service of officers, teachers and other staff of the Institute;

(*d*) the reservation of posts for the Scheduled Castes, the Scheduled Tribes and other backward categories of person as may be determined by the Central Government;

(*e*) the constitution of pension, insurance and provident funds for the benefit of the officers, teachers and other staff of the Institute;

(அ) உதவிப் பேராசிரியர் அல்லது அதற்கு மேல் உள்ள பணியிடத்தில் கல்விசார் பணியாளர் தொகுதிக்கு அமர்த்தம் செய்யப்படுமாயின் அல்லது கல்விசாரா பணியாளர் தொகுதிக்கு உதவிப் பேராசிரியர் சம்பள ஏற்றமுறைக்குச் சமமான அல்லது அதைவிட உயர் மேல்வரை சம்பள ஏற்றமுறையில் உள்ள பணியிடத்திற்கு அமர்த்தம் செய்யப்படுமாயின், ஆட்சி மன்றத்தாலும்; மற்றும்

(ஆ) பிற நேர்வு எதிலும், மேலாண்மை இயக்குநராலும் செய்யப்படுதல் வேண்டும்.

நிலையமை விதிகள்.

26. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, நிலையமைவிதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:–

(அ) கல்விகற்பிப்புத் துறைகளையும், ஆராய்ச்சி மையத்தையும் அமைத்தல், பயிலரங்குகள், ஆய்வுக் கூடங்கள், ஒளிப்பதிவு அறை ஆகியவற்றை அமைத்தல்;

(ஆ) புத்தாய்வுமாணவர் நிலைகள், படிப்பு உதவித்தொகைகள், புலமைஉதவித்தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை நிறுவுதல்;

(இ) நிறுவனத்தின் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர் தொகுதிகளை வகைப்படுத்துதல், அவர்களின் பதவிக்காலம், தகுதிப்பாடு மற்றும் அவர்களை அமர்த்தும் முறை மற்றும் அவர்களுக்கான பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள் ஆகியவற்றைத் தீர்மானித்தல் ;

(ஈ) பட்டியலில்கண்ட சாதியினர், பட்டியலில்கண்ட பழங்குடியினர் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த நபர்களுக்கு மைய அரசால் தீர்மானிக்கப்படலாகிறவாறு பணியிடங்களை ஒதுக்கீடு செய்தல்;

(உ) நிறுவனத்தின் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர் தொகுதியின் நலப்பயனுக்காக ஓய்வூதிய, காப்பீட்டு மற்றும் வருங்காலவைப்பு நிதியங்களை உருவாக்குதல்;

(f) the constitution, powers and duties of the authorities of the Institute;

(*g*) the manner of filling up of vacancies among members of the Governing Council;

(h) the authentication of the orders and decisions of the Governing Council;

(*i*) the meetings of the Governing Council, Senate or any Committee, the quorum at such meetings and the procedure to be followed in the conduct of their business;

(j) conferment of honorary degree;

(k) the establishment and maintenance of halls and hostels;

(*l*) the conditions of residence of students of the Institute and the levying of the fees for residence in the halls and hostels and other charges; and

(m) any other matter which by this Act is to be or may be specified by the Statutes.

Statutes how made.

**27.(**1) The first Statutes of the Institute shall be framed by the Governing Council with the previous approval of the Visitor and shall be laid as soon as may be before each House of Parliament.

(2) The Governing Council may, from time to time, make new or additional Statutes or may amend or repeal the Statutes in the manner hereafter in this section provided.

(ஊ) நிறுவன அதிகாரஅமைப்புகளை உருவாக்குதல், அவற்றின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்;

(எ) ஆட்சி மன்ற உறுப்பினர்களிடையே காலியிடங்களை நிரப்பும் முறை;

(ஏ) ஆட்சி மன்றத்தின் ஆணைகளுக்கும் முடிபுகளுக்கும் உறுதியொப்பமிடுதல்;

(ஐ) ஆட்சி மன்றம், ஆட்சிக்குழு அல்லது குழு எதனின் கூட்டங்கள், அத்தகைய கூட்டங்களில் குறைவெண் மற்றும் அவற்றின் அலுவலை நடத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறை;

(ஒ) மதிப்புறு பட்டம் வழங்குதல்;

(ஓ) கூடங்களையும் மாணவர் விடுதிகளையும் ஏற்படுத்துதல் மற்றும் பேணிவருதல்;

(ஔ) நிறுவனத்தின் மாணவர்களின் உறைவிடத்திற்கான வரைக்கட்டுகள் மற்றும் கூடங்களிலும் விடுதிகளிலும் தங்குவதற்கான கட்டணங்களையும் பிற கட்டணத்தொகைகளையும் விதித்தல்; மற்றும்

(க) இந்தச் சட்டத்தினால் நிலையமைவிதிகளில் வகைசெய்யப்பட வேண்டிய அல்லது வகை செய்யப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

27. (1) நிறுவனத்தின் முதலாம் நிலையமைவிதிகள் மேற்பார்வையீட்டாளரின் முன் ஒப்பேற்புடன் ஆட்சி மன்றத்தால் வனையப்படுதல் வேண்டும்; மற்றும் கூடிய விரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

நிலையமை விதிகள் எவ்வாறு செய்யப்–படுகின்றன.

(2) ஆட்சி மன்றமானது, அவ்வப்போது, இந்தப் பிரிவில் இதன் பின்பு வகை செய்யப்பட்ட முறையில் புதிய அல்லது கூடுதல் நிலையமைவிதிகளைச் செய்யலாம் அல்லது நிலையமைவிதிகளைத் திருத்தலாம் அல்லது நீக்கறவு செய்யலாம்.

(3) Every new Statute or addition to the Statute or any amendment or repeal of a Statute shall require the previous approval of the Visitor who may remit it to the Governing Council for consideration.

(4) A new Statute or a Statute amending or repealing an existing Statute shall have no validity unless it has been assented to by the Visitor.

Ordinances.

**28.** Subject to the provisions of this Act and the Statutes, the Ordinances of the Institute may provide for all or any of the following matters, namely:—

(*a*) the admission of the students to the Institute;

(*b*) the reservation for the Scheduled Castes, the Scheduled Tribes and other backward categories of persons;

(c) the courses of study to be laid down for all degrees, diplomas and certificates of the Institute;

(*d*) the conditions under which students shall be admitted to the degree, diploma and certificate courses and to the examinations of the Institute and award of degrees, diplomas and certificates;

(*e*) the conditions for award of fellowships, scholarships, exhibitions, medals and prizes;

(3) ஒவ்வொரு புதிய நிலையமைவிதி அல்லது நிலையமைவிதிக்கான சேர்க்கை அல்லது நிலையமைவிதி ஒன்றுக்கான திருத்தம் அல்லது நீக்கறவு ஒவ்வொன்றுக்கும் மேற்பார்வையீட்டாளரின் முன் ஒப்பேற்பு தேவைப்படுவதாகும்; அவர் அதனை ஓர்வு செய்வதற்காக ஆட்சி மன்றத்திற்கு மீள அனுப்பலாம்.

(4) ஒரு புதிய நிலையமைவிதியோ அல்லது நிலவுறும் நிலையமைவிதியைத் திருத்தம் செய்யும் அல்லது நீக்கறவு செய்யும் ஒரு நிலையமைவிதியோ அது மேற்பார்வையீட்டாளரால் இசைவளிக்கப்பட்டிருந்தாலன்றிச் செல்லுந்தன்மை கொண்டிருத்தல் ஆகாது.

நெறியமை விதிகள்.

28. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும் நிலையமைவிதிகளுக்கும் உட்பட்டு, நிறுவனத்தின் நெறியமைவிதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:–

(அ) நிறுவனத்தில் மாணவர்களைச் சேர்த்தல்;

(ஆ) பட்டியலில்கண்ட சாதியினர், பட்டியலில்கண்ட பழங்குடியினர் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த நபர்களுக்கான இட ஒதுக்கீடு;

(இ) நிறுவனத்தின் அனைத்துப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் சான்றிதழ்களுக்காகவும் விதித்தமைக்கப்பட வேண்டிய பாடவகைப் பயிலாறுகள்;

(ஈ) எந்த வரைக்கட்டுகளின்படி மாணவர்கள், நிறுவனத்தின் பட்டங்களுக்கும், பட்டயங்களுக்கும் மற்றும் சான்றிதழ் கல்விப் பயிற்சிகளுக்கும் மற்றும் தேர்வுகளுக்கும் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதும் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல் வேண்டும் என்பதும்;

(உ) புத்தாய்வுமாணவர் நிலைகள், படிப்புஉதவித்தொகைகள், புலமைஉதவித்தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் வழங்குவதற்கான வரைக்கட்டுகள்;

(*f*) the conditions and mode of appointment and duties of examining body, examiners and moderators;

(g) the conduct of examinations;

(h) the maintenance of discipline among the students of the Institute;

(*i*) the fees to be charged for courses of study in the Institute and for admission to the examinations of degrees, diplomas and certificates of the Institute; and

(*j*) any other matter which by this Act or the Statutes is to be or may be provided for by the Ordinances.

Ordinance how made.

29. (1) Save as otherwise provided in this section, Ordinances shall be made by the Senate.

(2) All Ordinances made by the Senate shall have effect from such date as it may direct, but every Ordinance so made shall be submitted, as soon as may be, to the Governing Council and shall be considered by the Governing Council at its next succeeding meeting.

(3) The Governing Council shall have power by resolution to modify or cancel any such Ordinance and such Ordinance shall from the date of such resolution stand modified accordingly or cancelled, as the case may be.

(ஊ) தேர்வுநடத்தும் குழுமம், தேர்வாளர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோரை அமர்த்துவதற்கான வரைக்கட்டுகள் மற்றும் அவர்களின் கடமைகள்;

(எ) தேர்வுகள் நடத்துதல்;

(ஏ) நிறுவனத்தின் மாணவர்களிடையே ஒழுங்குக் கட்டுப்பாட்டைப் பேணிவருதல்;

(ஐ) நிறுவனத்தில் பாடவகைப் பயிலாறுகளுக்காகவும் நிறுவனத்தின் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் சான்றிதழ்களுக்கான தேர்வுகளுக்கு அனுமதிப்பதற்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்; மற்றும்

(ஒ) இந்தச் சட்டத்தாலோ, நிலையமை விதிகளாலோ வகைசெய்யப்படவேண்டிய அல்லது நெறியமைவிதிகளால் வகைசெய்யப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

நெறியமைவிதி எவ்வாறு செய்யப்படுகிறது.

29. (1) இந்தப் பிரிவில் பிறவாறாக வகை செய்யப்பட்டிருப்பது நீங்கலாக, நெறியமைவிதிகள் ஆட்சிக்குழுவினால் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆட்சிக்குழுவினால் செய்யப்படும் அனைத்து நெறியமைவிதிகளும் அது பணிக்கிறவாறு அத்தகைய தேதியிலிருந்து செல்திறம் பெறுதல் வேண்டும், ஆனால் அவ்வாறு செய்யப்படும் நெறியமைவிதி ஒவ்வொன்றும், கூடிய விரைவில், ஆட்சி மன்றத்திற்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் ஆட்சி மன்றத்தால் அதன் அடுத்துத் தொடர்ந்துவரும் கூட்டத்தில் ஓர்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஆட்சி மன்றமானது, தீர்மானத்தின் மூலமாக அத்தகைய நெறியமைவிதி எதனையும் மாற்றமைவு செய்வதற்கு அல்லது அறவு செய்வதற்கு அதிகாரம் உடையது ஆகும்; மற்றும் அத்தகைய நெறியமைவிதியானது அத்தகைய தீர்மானத்தின் தேதியிலிருந்து அதற்கிணங்க, நேர்வுக்கேற்ப, மாற்றமைவு செய்யப்பட்டு அல்லது அறவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

Tribunal of Arbitration.

30. (1) Any dispute arising out of a contract between the Institute and any of its employees shall, at the request of the employee concerned or at the instance of the Institute, be referred to a Tribunal of Arbitration consisting of one member appointed by the Institute, one member nominated by the employee and an umpire appointed by the Visitor.

(2) The decision of the Tribunal of Arbitration shall be final and shall not be questioned in any court.

(3) No suit or proceeding shall lie in any court in respect of any matter which is required by sub-section (*1*) to be referred to the Tribunal of Arbitration.

(4) The Tribunal of Arbitration shall have power to regulate its own procedure.

(5) Nothing in any law for the time being in force relating to arbitration shall apply to arbitration under this section.

## CHAPTER III

## MISCELLANEOUS

Act and proceedings not to be invalidated by vacancies.

31.No act of the Institute or Governing Council or Senate or any other body set-up under this Act or the Statutes, shall be invalid merely by reason of—

(*a*) any vacancy in, or defect in the constitution thereof; or

30. (1) நிறுவனத்திற்கும் அதன் பணியாளர்களில் எவருக்கும் இடையேயான ஓர் ஒப்பந்தத்திலிருந்து எழும் பூசல் எதுவும், தொடர்புடைய பணியாளரின் கோரிக்கையின்படியோ அல்லது நிறுவனத்தின் வேண்டுகோளின்படியோ நிறுவனத்தால் அமர்த்தப்பெறும் ஓர் உறுப்பினர், பணியாளரால் நியமிக்கப்பெறும் ஓர் உறுப்பினர், மற்றும் மேற்பார்வையீட்டாளரால் அமர்த்தப்பெறும் ஒரு நடுவரும் அடங்கிய பொதுவர் தீர்ப்புமுறைத் தீர்ப்பாயம் ஒன்றுக்குச் சுட்டியனுப்பப்படுதல் வேண்டும்.

பொதுவர் தீர்ப்புமுறைத் தீர்ப்பாயம்.

(2) பொதுவர் தீர்ப்புமுறைத் தீர்ப்பாயத்தின் முடிபு அறுதியானதாகும்; மற்றும் நீதிமன்றம் எதிலும் எதிர்த்து வாதிடப்படுதல் ஆகாது.

(3). (1) ஆம் உட்பிரிவினால் பொதுவர் தீர்ப்புமுறைத் தீர்ப்பாயத்திற்குக் குறித்தனுப்பப்படத் தேவைப்படும் பொருட்பாடு எதனையும் பொறுத்து நீதிமன்றம் எதிலும் உரிமைவழக்கோ அல்லது நடவடிக்கையோ தொடர்தல் ஆகாது.

(4) பொதுவர் தீர்ப்புமுறைத் தீர்ப்பாயம் அதன் சொந்த நடைமுறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு அதிகாரம் உடையது ஆகும்.

(5) பொதுவர் தீர்ப்புமுறை தொடர்பாக அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் உள்ள எதுவும் இந்தப் பிரிவி படியான பொதுவர் தீர்ப்புமுறைக்குப் பொருந்துதல் ஆகாது.

## அத்தியாயம் III

## பல்வகை

31. நிறுவனத்தின் அல்லது ஆட்சி மன்றத்தின் அல்லது ஆட்சிக்குழுவின் அல்லது இந்தச் சட்டத்தின்படியோ அல்லது நிலையமைவிதிகளின்படியோ அமைக்கப்பட்ட பிற குழுமம் எதனின் செயல் எதுவும்,–

காலியிடங்கள் இருப்பதனால் செயல்களும் நடவடிக்கை–களும் செல்லுந்தன்–மையற்றவையாக ஆக்கப்படுதல் ஆகாது.

(அ) அதன் அமைப்பாக்கத்தில் உள்ள காலியிடம் அல்லது குறைபாடு எதனின்; அல்லது

(b) any defect in the election, nomination or appointment of a person acting as a member thereof; or

(c) any irregularity in its procedure not affecting the merits of the case.

Sponsored schemes.

32.Notwithstanding anything contained in this Act, whenever the Institute receives funds from any Government, the University Grants Commission or any other agency, including industry sponsoring a research scheme or a consultancy assignment or a teaching programme or a chaired professorship or a scholarship, etc., to be executed or endowed at the Institute—

(*a*) the amount received shall be kept by the Institute separately from the Fund of the Institute and utilised only for the purpose of the scheme; and

(*b*) the staff required to execute the same shall be recruited in accordance with the terms and conditions stipulated by the sponsoring organisations:

Provided that any money remaining unutilised shall be transferred to the endowment fund created under section 22 of this Act.

Power of Institute to grant degree, etc.

33.The Institute shall have the power to grant degrees, diplomas, certificates and other academic distinctions under this Act, which shall be equivalent to such corresponding degrees, diplomas, certificates and other academic distinctions granted by any University or Institute established or incorporated under any other law for the time being in force.

(ஆ) அதன் ஓர் உறுப்பினராகச் செயலுறும் ஒருவரின் தேர்விலோ, நியமனத்திலோ அல்லது அமர்த்தத்திலோ உள்ள குறைபாடு எதனின்; அல்லது

(இ) நிகழ்வின் தகுதிகளைப் பாதிக்காத அதன் நடைமுறையிலுள்ள முறைகேடு எதனின் காரணத்தினால் மட்டுமே செல்லுந்தன்மையற்றதாகாது.

ஊக்க ஆதரவுச் செயல்முறைத் திட்டங்கள்.

32. இந்தச் சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும், அரசு எதனிடமிருந்தோ, பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்தோ அல்லது நிறைவேற்றப்பட வேண்டிய அல்லது அறக்கொடையாக வழங்கப்பட வேண்டிய, ஆராய்ச்சி செயல்முறைத் திட்டம் அல்லது ஒரு கலந்தாய்வு ஒதுக்களிப்பு அல்லது கற்பித்தல் செயல்முறை அல்லது ஒரு தலைமைப் பேராசிரியர்நிலை அல்லது படிப்பு உதவித்தொகை முதலியவற்றிற்கு ஊக்க ஆதரவு தருகின்ற விசைத் தொழிற்சாலை உள்ளடங்கலான பிற முகமை எதினிலுமிருந்தோ நிறுவனம் நிதியங்களைப் பெறும்போதெல்லாம்—

(அ) பெறப்படும் தொகையானது, நிறுவனத்தின் நிதியத்திலிருந்து நிறுவனத்தால் தனியாக வைக்கப்பட்டுச் செயல்முறைத் திட்டத்தின் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) அதனை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் பணியாளர்தொகுதிக்கு ஊக்கஆதரவு தரும் அமைப்புகளால் சுட்டிக்காட்டப்படும் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின்படி ஆளெடுக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக**: பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருக்கும் பணம் எதுவும் இந்தச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின்படி உருவாக்கப்பட்ட நிலைக்கட்டளை நிதியத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

பட்டங்கள் முதலியவற்றை அளிப்பதற்கு நிறுவனத்திற்—கான அதிகாரம்.

33. நிறுவனமானது, இந்தச் சட்டத்தின்படி பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ்கள் மற்றும் பிற கல்விசார் தனிச்சிறப்புகள் அளிப்பதற்கு அதிகாரம் உடையது ஆகும்; அவை, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியும் நிறுவப்பட்ட அல்லது கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் எதனாலும் அளிக்கப்படும் அத்தகைய நேரிணையான பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ்கள் மற்றும் பிற கல்விசார் தனிச்சிறப்புகளுக்குச் சமமானவையாகும்.

Institute to be public authority under the Right to Information Act, 2005.

34.The provisions of the Right to Information Act, 2005 shall apply to the Institute, as if it were a public authority as defined in clause (*h*) of section 2 of the Right to Information Act, 2005. 22 / 2005.

Power of Central Government to make rules.

35. (1) The Central Government may, by notification, make rules to carry out the purposes of this Act.

(*2*) In particular and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:—

(*a*) the manner of appointment of the Managing Director, Secretary and Executive Director and terms and conditions of his services;

(*b*) the terms and conditions of service of the Managing Director, Secretary and the Executive Director under sub-section (*1*) of section 16, sub-section (*1*) of section 17 and sub-section (*1*) of section 18;

(*c*) the form and manner in which the books of account of the Institute shall be maintained under sub-section (*1*) of section 23; and

(*d*) any other matter which is required to be, or may be, prescribed.

(3) Every rule made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions,

22/2005. 34. தகவல்பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் வகையங்கள், நிறுவனத்திற்கு, தகவல்பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் 2 ஆம் பிரிவின் (ஏ) கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறு, அது ஒரு பொது அதிகாரஅமைப்பாக இருந்தாற்போன்று பொருந்துதல் வேண்டும். நிறுவனம் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் கீழ் பொது அதிகார அமைப்பாக இருத்தல்.

35. (1) மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு விதிகளைச் செய்யலாம். விதிகள் செய்வதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:—

(அ) மேலாண்மை இயக்குநர், செயலாளர், நிருவாக இயக்குநர் ஆகியோரை அமர்த்தும் முறை மற்றும் அவருடைய பணி வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள்;

(ஆ) 16 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியும், 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியும் மற்றும் 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியும் மேலாண்மை இயக்குநர், செயலாளர், நிருவாக இயக்குநர் ஆகியோருக்கான பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள்;

(இ) 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்கள் எந்த வடிவத்திலும் முறையிலும் பேணிவரப்படுதல் வேண்டுமோ அந்த வடிவம் மற்றும் முறை; மற்றும்

(ஈ) வகுத்துரைக்கப்படவேண்டிய, அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ முப்பது நாட்களைக் கொண்ட மொத்தக் காலஅளவுக்கு அமர்வில் இருக்கையில் அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்;

and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

Returns and information to be provided to Central Government.

36. The Institute shall furnish to the Central Government such returns or other information with respect to policies or activities as the Central Government may, for the purpose of reporting to Parliament or for the making of policy, from time to time, require.

Transitional provisions.

37. Notwithstanding anything contained in this Act—

(*a*) the Governing Council of the Society functioning as such, immediately before the commencement of this Act shall continue to so function until a new Governing Council is constituted for the Institute under this Act, but on the constitution of a new Governing Council under this Act the members of the Governing Council holding office before such constitution shall cease to hold office;

(*b*) until the first Statutes and the Ordinances are made under this Act, the rules and regulations, instructions and guidelines of the Society as in force, immediately before the commencement of this Act, shall continue to apply to the Institute insofar as they are not inconsistent with the provisions of this Act; and

மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதுவும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்; அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் இந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

மைய அரசுக்கு வழங்கப்பட வேண்டிய விவர அறிக்கை– களும் தகவல்களும்.

36. நிறுவனம், நாடாளுமன்றத்திற்கு அறிக்கையனுப்பும் நோக்கத்திற்காகவோ அல்லது கொள்கை உருவாக்குவதற்காகவோ, மைய அரசு, அவ்வப்போது வேண்டுறுத்துகிறவாறு கொள்கைகள் அல்லது செயற்பாடுகள் பொறுத்து அத்தகைய விவரஅறிக்கைகளை அல்லது பிற தகவல்களை மைய அரசுக்கு அளித்தல் வேண்டும்.

மாறும் இடைக் காலத்திற்கான வகையங்கள்.

37. இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,–

(அ) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு உடன் முன்பு, சங்கத்தின் ஆட்சி மன்றமாகச் செயல்படும் ஆட்சி மன்றம், இந்தச் சட்டத்தின்படி நிறுவனத்திற்காக ஒரு புதிய ஆட்சி மன்றம் அமைக்கப்படும் வரையில் அவ்வாறாகத் தொடர்ந்து செயல்படுதல் வேண்டும்; ஆனால் இந்தச் சட்டத்தின்படி ஒரு புதிய ஆட்சி மன்றம் அமைக்கப்படுவதன்பேரில் அத்தகைய அமைப்பாக்கத்திற்கு முன்பு பதவி வகித்துவந்த ஆட்சி மன்ற உறுப்பினர்கள் பதவி வகித்தல் அற்றுப்போதல் வேண்டும்;

(ஆ) இந்தச் சட்டத்தின்படி முதலாம் நிலையமைவிதிகளும் நெறியமைவிதிகளும் செய்யப்படுகிறவரையில், இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்கு உடன் முன்பு, செல்லாற்றலில் இருந்தவாறு சங்கத்தின் விதிகளும், ஒழுங்குறுத்தும்விதிகளும், நெறியுறுத்தங்களும் மற்றும் வழிகாட்டுநெறிகளும் அவை, இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் முரண்படாத அளவிற்கு நிறுவனத்திற்குத் தொடர்ந்து பொருந்துதல் வேண்டும்; மற்றும்

(*c*) any student who joined classes of the existing Institute on or after the academic year 2012-2013 or completed the course on or after the academic year 2013-2014 shall for the purposes of clause (*iii*) of section 7, be deemed to have pursued a course of study in the existing Institute if such student has not already been awarded degree or diploma for the same course of study.

Statute and Ordinance to be published in the Official Gazette and to be laid before Parliament.

38. (1) Every Statute or Ordinance made under this Act shall be published in the Official Gazette.

(2) Every Statute or Ordinance made under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the Statute or Ordinance or both Houses agree that the Statute or Ordinance should not be made, the Statute or Ordinance shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that Statute or Ordinance.

(இ) 2012–2013 கல்வியாண்டிலோ அதற்குப் பின்போ நிலவுறும் வகுப்புகளில் சேர்ந்த அல்லது 2013–2014 கல்வியாண்டிலோ அதற்குப் பின்போ பாடப்பிரிவுகளுக்கானப் பயிற்சியை முடித்த மாணவர் எவரும், 7 ஆம் பிரிவின் (iii) ஆம் கூறின் நோக்கங்களுக்காக, அத்தகைய மாணவர், அதே பாடவகைப் பயிலாறுக்காக ஏற்கனவே பட்டமோ, பட்டயமோ அளிக்கப்படாதிருப்பாராயின் நிலவுறும் நிறுவனத்தில் ஒரு பாடவகைப் பயிலாறைத் தொடர்ந்திருப்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நிலையமைவிதிகளும் நெறியமைவிதிகளும் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல் மற்றும் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்படுதல்.

38. (1) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட நிலையமைவிதி ஒவ்வொன்றும் அல்லது நெறியமைவிதி ஒவ்வொன்றும் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட நிலையமைவிதி ஒவ்வொன்றும் அல்லது நெறியமைவிதி ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது, ஒரு கூட்டத்தொடராகவோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ முப்பது நாட்களைக் கொண்ட ஒரு மொத்தக் காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில் அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்த நிலையமைவிதியில் அல்லது நெறியமைவிதியில் மாற்றமைவு எதுவும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த நிலையமைவிதி அல்லது நெறியமைவிதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த நிலையமைவிதி அல்லது நெறியமைவிதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்; அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த நிலையமைவிதியின்படி அல்லது நெறியமைவிதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

(3) The power to make Statutes or Ordinances shall include the power to give retrospective effect with the approval of the Central Government from a date not earlier than the date of commencement of this Act to Statutes or Ordinances or any of them but no retrospective effect shall be given to any Statute or Ordinance so as to prejudicially affect the interests of any person to whom such Statutes or Ordinances may be applicable.

Power to remove difficulties.

39. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order published in the Official Gazette, make such provision or give such direction not inconsistent with the purposes of this Act, as appears to it to be necessary or expedient for removing the difficulty:

Provided that no such order shall be made after the expiry of two years from the date of commencement of this Act.

(2) Every order made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament.

(3) நிலையமைவிதிகளையோ அல்லது நெறியமைவிதிகளையோ செய்வதற்கான அதிகாரம், நிலையமைவிதிகளுக்கு, நெறியமைவிதிகளுக்கு அல்லது அவற்றில் எதற்கும், மைய அரசின் ஒப்பேற்புடன், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முந்தையதாக அல்லாத ஒரு தேதியிலிருந்து முன்மேவு செல்திறம் கொடுப்பதற்கான அதிகாரத்தை உள்ளடக்கும்; ஆனால் அத்தகைய நிலையமைவிதிகள் அல்லது நெறியமைவிதிகள் எந்தவொரு நபருக்குப் பொருந்துதலாகுமோ அந்த நபர் எவரின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நிலையமைவிதி அல்லது நெறியமைவிதி எதற்கும் முன்மேவு செல்திறம் கொடுக்கப்படுதல் ஆகாது.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

39. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின் வழி அந்த இடர்ப்பாட்டை அகற்றுவதற்குத் தேவையென அல்லது உகந்ததென அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகையத்தினைச் செய்யலாம் அல்லது அத்தகைய பணிப்புரையைக் கொடுக்கலாம்:

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஈராண்டு கழிவுற்ற பின்பு செய்யப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

**THE SCHEDULE**

**[*See* section 3(*h*)]**

**INSTITUTE CAMPUSES**

| Sl. No. | Name of the State | Name and address of the existing Institute campus and its location |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | Uttar Pradesh | Footwear Design and Development Institute, A-10/A, Sector-24, Noida, Gautam Budh Nagar, Pin-201301. |
| 2. | Tamil Nadu | Footwear Design and Development Institute, Plot No: E-1, SIPCOT Industrial Park, Irrungattukotai, Kancheepuram. |
| 3. | West Bengal | Footwear Design and Development Institute, Kolkata Leather Complex, Mouzakariadanga, J.L No-32 and Gangapur, J.L No-35, Kolkata. |
| 4. | Haryana | Footwear Design and Development Institute, Plot No- 1, Sector-31 B, IMT Rohtak. |
| 5. | Rajasthan | Footwear Design and Development Institute,Village Mandor, Tehsil Jodhpur, District- Jodhpur. |

**இணைப்புப்பட்டியல்**

**[3(ஏ) பிரிவைக் காண்க]**

**நிறுவனத்தின் வளாகங்கள்**

| வரிசை எண். | மாநிலத்தின் பெயர் | நிலவுறும் நிறுவன வளாகத்தின் பெயர் மற்றும் முகவரி மற்றும் அதன் அமைவிடம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | உத்தரப் பிரதேசம் | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், ஏ–10/ஏ, பகுதி–24, நொய்டா, கௌதம புத்தர் நகர், அ.கு.எண்.201301. |
| 2. | தமிழ்நாடு | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், மனை எண்.ஈ–1, சிப்காட் தொழிற் பூங்கா, இருங்காட்டுக் கோட்டை, காஞ்சிபுரம். |
| 3. | மேற்கு வங்காளம் | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், கொல்கத்தா தோல் வளாகம், மௌசகரியடங்கா,ஜே.எல்.எண் –32 மற்றும் கங்காபூர், ஜே.எல்.எண்.–35, கொல்கத்தா. |
| 4. | அரியானா | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், மனை எண்–1, பகுதி 31 பீ, ஐஎம்டி ரோடாக். |
| 5. | ராஜஸ்தான் | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், மண்டோர் கிராமம், ஜோத்பூர் வட்டம், ஜோத்பூர் மாவட்டம். |

| Sl. No. | Name of the State | Name and address of the existing Institute campus and its location |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 6. | Uttar Pradesh | Footwear Design and Development Institute, Sultanpur Road, Fursatganj, Raebareli, Pin-229302. |
| 7. | Madhya Pradesh | Footwear Design and Development Institute, Corner Plot, Khasara No: 31, Nagpur-Batil Road, Immlikhera Chowk, Chhindwara. |
| 8. | Madhya Pradesh | Footwear Design and Development Institute, Gram Maharajpura Panchayat, Hari Pur, Phawa No-42, Survey No.571/158, 61/1/1/1 on Gram Puraposar Road, Guna. |
| 9. | Bihar | Footwear Design and Development Institute, Plot No P-6, Megha Industrial Area, Moza Dumri, Arra Road, Patna. |
| 10. | Telengana | Footwear Design and Development Institute, LIDCAP Campus, HS Durga, Gachibowli, Bidar-Hyderabad Road, Hyderabad. |

| வரிசை எண். | மாநிலத்தின் பெயர் | நிலவுறும் நிறுவன வளாகத்தின் பெயர் மற்றும் முகவரி மற்றும் அதன் அமைவிடம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 6. | உத்தரப் பிரதேசம் | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், சுல்தான்பூர் சாலை, ஃபுர்சட்கான்ஞ், ரேபரேலி, அ.கு.எண்.229302. |
| 7. | மத்தியப் பிரதேசம் | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், கடைமூலை மனை, கசாரா எண்.31, நாக்பூர்–பாட்டீல் சாலை, இம்லிக்கேரா சவுக், சின்த்வாரா. |
| 8. | மத்தியப் பிரதேசம் | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், கிராமம் மகாராஜபுர ஊராட்சி, அரிபூர், பாவா எண்.–42, புல எண்.571/158, 61/1/1/1 கிராம புரபொசர் சாலை, குணா. |
| 9. | பீகார் | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், மனை எண்.பி–6, மெகா தொழிலகப் பகுதி, மோசா டும்ரி, ஆர்ராசாலை, பாட்னா. |
| 10. | தெலுங்காணா | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், எல்ஐடிசிஏபி வளாகம், எச்எஸ் துர்கா, கச்சிபௌலி, பிடார்–ஐதராபாத் சாலை, ஐதராபாத். |

| Sl. No. | Name of the State | Name and address of the existing Institute campus and its location |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 11. | Gujarat | Footwear Design and Development Institute, Plot No H-3301, Near ESIC Hospital, Ankleshwar Industrial Estate, Ankleshwar. |
| 12. | Punjab | Footwear Design and Development Institute, District SAS Nagar (Mohali), Chandigarh-Patiala Highway, Chandigarh. |

| வரிசை எண். | மாநிலத்தின் பெயர் | நிலவுறும் நிறுவன வளாகத்தின் பெயர் மற்றும் முகவரி மற்றும் அதன் அமைவிடம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 11. | குஜராத் | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், மனை எண்.எச்,–3301, இஎஸ்ஐசி மருத்துவமனை அருகில், அங்கலேஷ்வர் தொழிற்பேட்டை, அங்கலேஷ்வர். |
| 12. | பஞ்சாப் | காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், எஸ்ஏஎஸ் நகர் மாவட்டம் (மொஹாலி), சண்டிகர்– பாட்டியாலா நெடுஞ்சாலை, சண்டிகர். |